T

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | |

நேரம்: 3.00 மணி

## கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள்: 90

### பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் : 20×1=20

1) உரிமையாளரின் சொத்துகள் ரூ. 5,00,000 மற்றும் பொறுப்புகள் ரூ. 2,00,000 எனில் அவருடைய முதல் தொகை

அ) ரூ. 7,00,000 ஆ) ரூ. 5,00,000 இ) ரூ. 3,00,000 ஈ) ரூ. 2,00,000

2) ஒரு மன்றத்தில் உள்ள 300 உறுப்பினர்கள் ஆண்டு சந்தாவாக ரூ. 100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ரூ. 200 முன்கூட்டி பெற்ற சந்தா ரூ. 300 வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினைக் கண்டறியவும்.

அ) ரூ. 29,900 ஆ) ரூ. 30,000 இ) ரூ. 30,100 ஈ) ரூ. 30,700

3) பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?

அ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து ஆ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து

இ) நற்பெயரினை வாங்க முடியாது ஈ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து

4) முதலைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள்

அ) பொறுப்புகள் ஆ) நட்டம் இ) இலாபம் ஈ) ரொக்கம்

5) மறுமதிப்பீட்டில் சொத்துக்களின் மதிப்பு உயர்வது

அ) நட்டம் ஆ) செலவு இ) ஆதாயம் ஈ) இவற்றுள் எதுவுமில்லை

6) புற அக பொறுப்புகள் விகிதம் அளவிடுவது

அ) இலாபம் ஈட்டும் திறன் ஆ) குறுகிய காலக்கடன் தீர்க்கும் திறன்

இ) செயல்திறன் ஈ) நீண்டகாலக் கடன் தீர்க்கும் திறன்

7) A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். தற்போது A விலகுகிறார் B மற்றும் C -யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்

அ) 2:3 ஆ) 4:2 இ) 2:1 ஈ) 3:2

8) கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932-ன் படி வழங்கப்படும் வட்டிவீதம் ...........

அ) ஆண்டுக்கு 5% ஆ) ஆண்டுக்கு 8%

இ) ஆண்டுக்கு 6% ஈ) ஆண்டுக்கு 12%

9) நிதி என்னும் சொல் குறிப்பிடுவது

அ) நிலைச் சொத்துக்கள் ஆ) நடப்புப் பொறுப்புகள்

இ) நீண்டகாலச் சொத்துக்கள் ஈ) நடைமுறை முதல்

10) சராசரி இலாபம் ரூ. 50,000 மற்றும் சாதாரண இலாபம் ரூ. 40,000 ஆக இருக்கும் போது உயர் இலாபம்

அ) ரூ. 10,000 ஆ) ரூ. 25,000 இ) ரூ. 15,000 ஈ) ரூ. 5,000

11) பின்வருவனவற்றில் எது இலாப நட்டப்பகிர்வு கணக்கில் காட்டப்படும்?

அ) கூட்டாளியின் ஊதியம் ஆ) அலுவலகச் செலவுகள்

இ) வங்கிக்கடன் மீதான வட்டி ஈ) பணியாளர் ஊதியம்

12) கூட்டாளி விலகலின் போது பொதுகாப்பு மாற்றப்படுவது

அ) தொடரும் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு

ஆ) அனைத்துக் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு

இ) நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு கணக்கிற்கு

ஈ) மறுமதிப்பீட்டுக் கணக்கிற்கு

Scanned with CamScanner

13) எதிர்ப்பதிவு சான்றாவணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?
அ) அறிக்கைகள்
ஆ) தலைமைப்பதிவு
இ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது
ஈ) அலுவலகப் பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம்

14) பின்வருவனவற்றுள் வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) தணிக்கைக் கட்டணம் ஆ) மின்கட்டணம்
இ) ஆயுள் உறுப்பினர் கட்டணம் ஈ) தொலைபேசிக் கட்டணம்

15) விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ரூ. 3,00,000/- அவ்வாண்டின் தொடக்கச் சரக்கிருப்பு ரூ. 60,000; அவ்வாண்டின் இறுதிச் சரக்கிருப்பு ரூ. 40,000 எனில், சரக்கிருப்புச் சுழற்சி விகிதம்
அ) 6 மடங்கு ஆ) 2 மடங்கு இ) 8 மடங்கு ஈ) 3 மடங்கு

16) F11 சாவியின் பயன்பாடு
அ) நிறுவனக் கட்டமைப்பு
ஆ) நிறுவனப் பண்புக்கூறுகள்
இ) சட்டம் மற்றும் வரிவிதிப்பு பண்புக்கூறுகள்
ஈ) கணக்கியல் சான்றாவணங்கள்

17) ஒரு பொதுஅளவு இருப்புநிலைக்குறிப்பில், நீண்டகாலச் சொத்துக்களின் சதவீதம் 85 எனில், நடப்புச் சொத்துக்களின் சதவீதம் எவ்வளவு?
அ) 15 ஆ) 185 இ) 100 ஈ) 115

18) ஒறுப்பிழப்புச் செய்த பங்குகளை, மறுவெளியீடு செய்த பிறகு பங்கு, ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்படுவது
அ) பத்திர முனைமக் கணக்கிற்கு ஆ) பொதுக்காப்புக் கணக்கிற்கு
இ) உபரிக் கணக்கிற்கு ஈ) முதலினக் காப்புக் கணக்கிற்கு

19) கூட்டாளி சேர்ப்பின் போது புதிய கூட்டாளி நற்பெயருக்காகக் கொண்டு வரும் தொகை யாருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்?
அ) புதிய கூட்டாளி ஆ) அலுவலகச் செலவுகள் பழைய கூட்டாளி
இ) வங்கிக்கடன் மீதான வட்டி ஈ) பணியாளர் ஊதியம் அனைத்து கூட்டாளி
பொருந்தாத வினா

20) விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத்தொகை உடனடியாக செலுத்தாத போது, அது மாற்றப்படும் கணக்கு
அ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு ஆ) வங்கி க/கு
இ) பிற கூட்டாளிகளின் முதல் க/கு ஈ) விலகும் கூட்டாளியின் முதல் க/கு

## பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்: 7×2=14
வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21) இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனி வணிகர் பொதுவாகப் பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.

22) இலாப நோக்கமற்ற அமைப்பின் முதலின செலவுகள் ஏதேனும் நான்கினைத் தரவும்.

23) கூட்டாண்மை நிறுவனத்தின் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் இரண்டு சூழ்நிலைகளைத் தரவும்.

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



24) இறந்த கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகையினை அவருடைய நிறைவேற்றாளா கணக்கிற்கு மாறுவதற்குரிய குறிப்பேட்டுப் பதிவினை தரவும்.

25) வானவில் மின்பொருள் வரையறு நிறுமம் ரூ. 10 மதிப்பில் வெளியிட்ட 1,000 நேர்மைப் பங்குகளை அர்ஜுன் தம்வசம் வைத்திருந்தார். அவர் விண்ணப்பத்தின் போது ரூ. 3 ஒதுக்கீட்டின் மீது ரூ. 4 செலுத்தி விட்டார். ஆனால் முதல் மற்றும் இறுதி அழைப்பின் மீதான ரூ. 3 அவரால் செலுத்த முடியவில்லை. அழைப்புத் தொகை செலுத்தாத காரணத்தினால் இயக்குநர்கள், அப்பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர். ஒறுப்பிழப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

26) கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும். மொத்த நடப்பு பொறுப்புகள் ரூ. 2,40,000 ; மொத்த நடப்புச் சொத்துக்கள் ரூ. 4,50,000 ; சரக்கிருப்பு ரூ. 70,000 ; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் ரூ. 20,000.

27) ஏதேனும் ஐந்து கணக்கியல் அறிக்கைகளைக் கூறுக.

28) பின்வரும் தகவல்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2021 ஜனவரி 1 அன்று முதல் | 2,60,000 |
| 2021 டிசம்பர் அன்று முதல் | 3,60,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 20,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | 50,000 |

29) ராம் மற்றும் ஷியாம் இருவரும் கூட்டாளிகள். ராம் ஒவ்வொரு அரையாண்டின் தொடக்கத்திலும் ரூ. 12,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீதான வட்டி ஆண்டுக்கு 10% 2021 டிசம்பர் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீதான வட்டியினைச் சராசரி காலமுறையைப் பயன்படுத்திக் கணக்கிடவும்.

30) ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் நட்டங்கள் பின்வருமாறு: இலாபம் 2014:ரூ.20,000; 2015:ரூ.19,000; 2016:ரூ.12,000; 2017:ரூ.13,000 மற்றும் 2018:ரூ.14,000 (நட்டம்) 5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

## பகுதி - இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×3=21**

கட்டாய வினா : கேள்வி எண் - 40

31) இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமைபெறா பதிவேடுகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

32) பெறுதல் மற்றும் செலுத்தல்கள் கணக்கு மற்றும் வருவாய் செலவினக் கணக்கு இடையே வேறுபாடுகள் தருக. (ஏதேனும் 3)

33) அந்தோணி மற்றும் அக்பர் என்ற இரு கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018 ஜனவரி 1 அன்று அவர்களின் முதல் கணக்குகளின் இருப்புகள், அந்தோணி ரூ. 60,000 மற்றும் அக்பர் ரூ. 40,000 ஆகும். 2018 ஏப்ரல் 1 அன்று அந்தோணி கூடுதல் முதலாக ரூ. 10,000 கொண்டு வந்தார். அவ்வாண்டில் அக்பர் ரூ. 5,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். 2018 டிசம்பர் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% எனக் கணக்கிடவும்.

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



34) நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.

35) ஹரி, மாதவன் மற்றும் கேசவன் ஆகிய கூட்டாளிகள் இலாப நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2017, ஏப்ரல் 1 அன்று வான்மதி புதிய கூட்டாளியாகச் சேர்த்தபின் அவர்களின் இலாப விகிதம் 4:3:2:1 என முடிவு செய்யப்பட்டது. பின்வரும் சரிகட்டுதலின் செய்யப்பட வேண்டும்.

அ) வளாகத்தின் மதிப்பு ரூ. 60,000 அதிகரிக்கப்பட்டது.

ஆ) சரக்கிருப்பு மீது ரூ. 5,000, அறைகலன் மீது ரூ. 2,000, இயந்திரம் மீது ரூ. 2,500 தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

இ) கொடுபட வேண்டிய பொறுப்பு ரூ. 500 உருவாக்கப்பட வேண்டும். குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து, மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயார் செய்யவும்.

36) அழைப்பு முன்பணம் குறித்துச் சுருக்கமாக எழுதவும்.

37) குமார் நிறுமத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 மார்ச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொதுஅளவு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 |
| இதர வருமானம் | 20,000 |
| செலவுகள் | 3,00,000 |

38) விவின், ஹரி மற்றும் ஜாய் என்ற கூட்டாளிகள் சமவிகிதத்தில் இலாபம் மற்றும் நட்டத்தினைப் பகிர்ந்து வருகின்றனர். 31.3.2017 அன்று ஹரி விலகினார். அவர் விலகிய நாளில், நிறுவனத்தின் ஏடுகளில் பொதுகாப்பு ரூ. 60,000 காட்டியது. பொதுக்காப்பை மாற்றுவதற்கான குறிப்பேட்டுப் பதிவைத் தரவும்.

39) Tally ERP -9 இல் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளைக் குறிப்பிடவும்.

40) பின்வரும் விவரங்களிலிருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயர் மதிப்பைக் காணவும்.

அ) சராசரி இலாபம் ரூ. 20,000.

ஆ) சாதாரண இலாப விகிதம் 10%.

இ) பயன்படுத்தப்பட்ட முதல் ரூ. 1,50,000.

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) அ) 2018 ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ரூ. 1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. 2019 மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு.

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோா | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 |
| கணினி | 30,000 | கைரொக்கம் | 60,000 |
| இயந்திரம் | 3,00,000 | | |

அவ்வாண்டில் அவா தன்னுடைய சொந்த பயனுக்காக ரூ. 30,000 எடுத்துக்கொண்டாா. அவ்வாண்டில் அவா கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ. 40,000. அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

(அல்லது)

ஆ) இராஜன் மற்றும் செல்வா இருவரும் கூட்டாளிகள். அவாகள் 3:1 விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிா்ந்து வந்தனா. அவாகளது 31.3.2017 நாளன்றைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துக்கள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | கட்டடம் | | 25,000 |
| இராஜன் | 30,000 | | அறைகலன் | | 1,000 |
| செல்வா | 16,000 | 46,000 | சரக்கிருப்பு | | 20,000 |
| பொதுக்காப்பு | | 4,000 | கடனாளிகள் | | 16,000 |
| கடனீந்தோா | | 37,500 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | 3,000 |
| | | | வங்கி ரொக்கம் | | 12,500 |
| | | | இலாப நட்டம் க/கு (நட்டம்) | | 10,000 |
| | | 87,500 | | | 87,500 |

01.04.2027-இல் பின்வரும் நிபந்தனைகளுடன் கணேசன் என்பவா புதிய கூட்டாளியாக சேருகிறாா.

i) கணேசன் 1/5 இலாபப் பங்கிற்கென ரூ. 10,000 முதல் கொண்டு வருகிறாா.

ii) சரக்கிருப்பு மற்றும் அறைகலன் மதிப்பில் 10% குறைத்து மதிப்பிடப்படுகிறது. கடனாளிகள் மீது 5% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்படுகிறது.

iii) கட்டடத்தின் மீது 20% மதிப்பேற்றம் செய்யப்படுகிறது.

மறுமதிப்பீட்டுக் கணக்கு, புதிய கூட்டாளி சோக்கைக்குப் பின் உள்ள கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பு தயாா செய்யவும்.

42) அ) பின்வரும் விவரங்களிலிருந்து உயா இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

அ) பயன்படுத்தப்பட்ட முதல் : ரூ. 1,20,000

ஆ) சாதாரண இலாப விகிதம் : 20%

இ) 5 ஆண்டுகளுக்குரிய நிகர இலாபம்.
2014 : ரூ.30,000; 2015 : ரூ.32,000; 2016 : ரூ.35,000; 2017 : ரூ.37,000 மற்றும் 2018 : ரூ. 40,000.

ஈ) கூட்டாளிகளுக்கான உழைப்பூதியம் ஆண்டுக்கு ரூ. 2,800.

(அல்லது)

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com


ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.

43) அ) திருச்சி கல்வியியல் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.1.2018) | 20,000 | பாதுகாப்புப் பெட்டக வாடகை பெற்றது | 12,000 |
| முதலீடுகள் செய்தது | 80,000 | அறைகலன் விற்றது | 5,000 |
| மதிப்பூதியம் செலுத்தியது | 3,000 | பொதுச்செலவுகள் | 7,000 |
| நன்கொடை பெற்றது | 80,000 | அஞ்சல் செலவுகள் | 1,000 |
| தணிக்கைக் கட்டணம் செலுத்தியது | 2,000 | சந்தா பெற்றது | 10,000 |

(அல்லது)

ஆ) நிவேதா வரையறு நிறுமம் ரூ. 10 மதிப்பிலான 1,000 நேர்மைப் பங்குகளை, அழைப்புத்தொகை பங்கு ஒன்றிற்கு ரூ. 4 வீதம் செலுத்தவில்லை என ஒறுப்பிழப்பு செய்தது. இதில் பங்கு ஒன்றிற்கு ரூ. 7 வீதம் 80 பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளை தரவும்.

44) அ) கீழ்க்காணும் திருச்சி மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018 மார்ச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு கைரொக்கம் | 11,000 | அறைகலன் வாங்கியது | 10,000 |
| பங்காதாயம் பெற்றது | 27,600 | வாடகை | 2,800 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | 3,000 | செயலா மதிப்பூதியம் | 15,000 |
| உறுப்பினர் சந்தா | 31,000 | தபால் செலவுகள் | 1,700 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை | 8,000 | பொதுச் செலவுகள் | 4,350 |
| முதலீடுகள் மீதான வட்டி | 1,250 | அச்சு மற்றும் எழுதுபொருள்கள் | 45,000 |
| அறைகலன் விற்றது (ஏட்டு மதிப்பு ரூ. 4,400) | 5,000 | தணிக்கைக் கட்டணம் | 5,000 |
| | | இறுதி இருப்பு கைரொக்கம் | 3,000 |
| | 86,850 | | 86,850 |

(அல்லது)

ஆ) சந்திரா நிறுமத்தின் பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து 2016 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ஒப்பீட்டு இருப்புநிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| விவரம் | 2020 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரா நிதி | 1,00,000 | 2,60,000 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 50,000 | 60,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 25,000 | 30,000 |
| மொத்தம் | 1,75,000 | 3,50,000 |
| சொத்துக்கள் | | |
| நீண்டகாலச் சொத்துக்கள் | 1,00,000 | 2,00,000 |
| நடப்புச் சொத்துக்கள் | 75,000 | 1,50,000 |
| மொத்தம் | 1,75,000 | 3,50,000 |

45) அ) நரேஷ், மணி மற்றும் முத்து ஆகிய கூட்டாளிகள் 2:2:1 எனும் விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனா. 2019 மாாச் 31-ம் நாள் நிறுவனத்திலிருந்து முத்து விலகினாா. முத்து விலகிய நாளன்று, ஏடுகளில் நற்பெயா ரூ. 40,000 எனக் காட்டியது. அவாகள் முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

அ) நற்பெயா முழுவதையும் போக்கெழுத கூட்டாளிகள் முடிவெடுத்தால்

ஆ) நற்பெயரில் பாதித் தொகையைப் போக்கெழுத கூட்டாளிகள் முடிவெடுத்தால்

(அல்லது)

ஆ) பின்வரும் விவரங்களைக் கொண்டு குறிஞ்சி வரையறு நிறுவனத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. ஆயிரங்களில் | | |
|---|---|---|---|
| | 2015-2016 | 2016-2017 | 2017-2018 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 120 | 132 | 156 |
| இதர வருமானம் | 50 | 38 | 65 |
| செலவுகள் | 100 | 135 | 123 |

46) அ) கவின், மதன் மற்றும் ரஞ்சித் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை முறையே 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனா. 2018 டிசம்பா 31 அன்று கவின் கூட்டாண்மையை விட்டு விலகுகிறாா. விலகலுக்குப் பின் தேவையான சரிக்கட்டுதல்களைச் செய்த பிறகு அவருடைய முதல் கணக்கு ரூ. 1,50,000 வரவிருப்பைக் காட்டியது. பின்வரும் நிலைகளில் பதிய வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

i) விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

ii) விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை.

iii) ரூ. 1,00,000 உடனடியாகக் காசோலை மூலம் செலுத்தப்பட்டது. மீதித்தொகை இன்னும் செலுத்தப்பட உள்ளது.

(அல்லது)

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



ஆ) அருள் நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

i) டிசம்பர் 31-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளாக 2016, 2017 மற்றும் 2018-ன் இலாபங்கள் முறையே ரூ. 46,000, ரூ. 44,000 மற்றும் ரூ. 50,000.

ii) 2016-ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ. 5,000 சேர்ந்துள்ளது.

iii) 2017-ஆம் ஆண்டின் இறுதிச்சரக்கிருப்பு ரூ. 10,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.

47) அ) புராகிரஸ் வரையறு நிறுமம் 30,000 சாதாரண பங்குகளை பங்கொன்று ரூ. 10 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ. 2, ஒதுக்கீட்டின் போது ரூ. 4 முதலாவது அழைப்பின் போது ரூ. 2 மற்றும் இரண்டாவது அழைப்பின் போது ரூ. 2 செலுத்தப்பட வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன மற்றும் அனைத்துத் தொகைகளும் முறையாகப் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

(அல்லது)

ஆ) மகேஷ் நிறுவனத்தின் 2019 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு.

| விவரம் | ரூ. |
|---|---|
| **i) பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| 1. பங்குதாரர் நிதி நேர்மை பங்கு முதல் | 20,00,000 |
| 2. நீண்டகாலப் பொறுப்புகள் | 5,00,000 |
| நீண்டகால கடன்கள் | |
| 3. நடப்பு பொறுப்புகள் | |
| அ) குறுகிய கால கடன்கள் | 1,70,000 |
| ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவை | 2,50,000 |
| இ) இதர நடப்புப் பொறுப்புகள் | |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 30,000 |
| ஈ) குறுகிய கால ஒதுக்குகள் | 50,000 |
| மொத்தம் | 30,00,000 |
| **ii) சொத்துக்கள்** | |
| 1. நீண்டகாலச் சொத்துக்கள் | |
| அ) நிலைச் சொத்துக்கள் | 15,00,000 |
| புலனாகும் சொத்துக்கள் | |
| 2. நடப்புச் சொத்துக்கள் | |
| அ) சரக்கிருப்பு | 4,50,000 |
| ஆ) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் | 7,00,000 |
| இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள் | 3,00,000 |
| ஈ) இதர நடப்புச் சொத்துகள் | |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 50,000 |
| மொத்தம் | 30,00,000 |

(அ) நடப்பு விகிதம் (ஆ) நீர்மை விகிதம் கணக்கிடவும்.

-------------

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com